Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.74/2026

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.முத்துச்செல்வி | Occupation | |
| Husband name | பிரவீன் | Calling | |
| Village | வத்திராயிருப்பு | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of March 2026.

27.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வத்திராயிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனது கணவர் பிரவீன் கூறியதன் பேரில் தெரிந்துகொண்டேன். எனது கணவர் திருவில்லிபுத்தூர் ராஜீவ் காந்தி நகரிலுள்ள மதுரா பைனான்ஸ் ஐ சேர்ந்த நிறுவனமான கிராமின் குட்டாவில் எனது கணவர் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வருகிறார். பொதுவாக எனது கணவர் காலை 06.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு இரவு 11.00 மணிக்கு தான் வீட்டிற்கு வருவார். கடந்த 14.11.2025 அன்று இரவு வெகுநேரமாகியும் வீட்டிற்கு வராததால் நான் எனது கணவருக்கு போன் செய்தபோது வேறொரு நபர் எனது கணவர் போனை எடுத்து மல்லி அருகேயுள்ள கார்த்திகைப்பட்டி விலக்கில் எனது கணவர் விபத்து ஏற்பட்டு கிடப்பதாகவும் காதிலிருந்து ரத்தம் வருவதாகவும் வீட்டில் பெரியவர்கள் யாராவது இருந்தால் உடனே அங்கு வரச்சொல்லுமாறு என்னிடம் கூறினார். நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு சம்பவயிடத்திலிருந்த யாரோ 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது கணவரை சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துவிட்டார்கள். அங்கு சென்று எனது கணவரிடம் விசாரித்தபோது நான்

சிவகாசியிலிருந்து திருவில்லிபுத்தூர் வந்துகொண்டிருந்தபோது தனக்கு எதிரே வந்த சிப்ட் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். எனது கணவருக்கு இடது காலில் கணுக்காலுக்கு கீழ் எலும்புகள் நொறுங்கியிருந்தது. வலது காலில் தொடை எலும்பு உடைந்ததாக கூறினார்கள். மேலும் இடது கை உடைந்திருந்தது. அங்கங்கே உடலில் சிராய்ப்பு காயங்களும் இருந்தது. எனது கணவரை அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 3 நாட்கள் சிகிச்சைக்காக அவரை அனுமதித்திருந்தபோது சரியாக சிகிச்சை கொடுக்கப்படாததால் தனியார் மருத்துவமனையில் வைத்து பார்த்துக்கொள்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு திருவில்லிபுத்தூரிலுள்ள வேல் தனியார் மருத்துவமனையில் அவரை சிகிச்சைக்காக சேர்த்தோம். எனது கணவரை விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தபோது அங்கு வந்த போலீசாரிடம் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

எனக்கு மேற்படி தொலைபேசியில் அழைப்பு வந்தவுடன் நேரடியாக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு தான் சென்றேன் என்றால் சரிதான். மேற்படி எனது முதல் விசாரணையில் எனக்கு போன் செய்த நபர் எனது கணவர் கார்த்திகைப்பட்டி விலக்கு அருகே விபத்து ஏற்பட்டு கிடப்பதாக கூறியதாக கூறியுள்ளேன் என்றாலும் போலீசார் விசாரணையிலும் எனக்கு போன் செய்த நபர் எனது கணவரை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டதாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றாலும் சரிதான். எனது கணவர் என்னிடம் பிரதாப் சிங் என்பவர் மேற்படி காரை ஓட்டிவந்ததாக கூறினார் என்று இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.74/2026

**Depositions of PW- 2**

| Name | **திரு.பிரவீன்** | Occupation | பைனான்ஸ் நிறுவன ஊழியர் |
|---|---|---|---|
| Father's name | கண்ணன் | Calling | |
| Village | வத்திராயிருப்பு | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of March 2026.

27.03.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வத்திராயிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்ஸில் பணம் வசூல் செய்யும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 எனது மனைவி ஆவார். நான் மதுரா பைனான்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.11.2025 அன்று பணம் வசூல் செய்துவிட்டு இரவு 09.00 மணியளவில் சிவகாசியிலிருந்து திருவில்லிபுத்தூரிலுள்ள மதுரா பைனான்ஸ் கிளைக்கு எனது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது கார்த்திகைப்பட்டி விலக்கு அருகில் TN 94 B 2651 என்ற பதிவெண் கொண்ட காரானது அதிவேகமாக வந்து எனது இருசக்கர வாகனத்தில் மோதியது. பின்னர் அங்கிருந்து என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைதது சென்றார்கள். மேற்படி விபத்தில்எனக்கு இரண்டு கால்களும் இடது கையும் உடைந்துவிட்டது. அங்கிருந்து என்னை மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு 3 நாட்கள் சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சை பெற்றுவிட்டு அங்கிருந்து திருவில்லிபுத்தூர் வேல் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். வேல் மருத்துவமனையில் எனக்கு அறுவை சிகிச்சை

செய்தார்கள். மேற்படி சம்பவம் சம்மந்தமாக போலீசாரிடம் எனது மனைவியான அசா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

விபத்து நடந்த சிவகாசி டு திருவில்லிபுத்தூர் சாலையான கீழமேல் சாலை என்றால் சரிதான். கார்த்திகைப்பட்டி விலக்கிலிருந்து சிறிது தூரம் தள்ளிதான் சாலைக்கு வடக்கு புறம் பெல் கேட்டரிங் உள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு பின் அந்த இடத்தில் இருந்த கார்த்திகைப்பட்டியை சேர்ந்த நபர்கள் என்னை தூக்கினார்கள். அவர்கள் தான் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றாலும் அவர்கள் தான் எனது மனைவிக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றாலும் சரிதான். மேற்படி சம்பவத்திற்கு முன் ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தன்று மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் சிப்ட் காரில் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் 4 நபர்கள் அதில் வந்தார்கள். ஆஜர் எதிரிதான் மேற்படி காரை ஓட்டிவந்தார் என்று போலீசார்விசாரித்து என்னிடம் கூறிய பின்பு தான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனக்கு மது அருந்தும் பழக்கமில்லை. சம்பவத்தன்று நான் மது அருந்திவிட்டு தான் வாகனத்தை ஓட்டிவந்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று நான் மது அருந்தவில்லை அதற்கு முன் தினம் தான் மது அருந்தியிருந்தேன். சம்பவத்தன்று நான் தான் மது அருந்திவிட்டு மேற்படி காரின் மீது இருசக்கர வாகனத்தை மோதியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தானது எனது கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மை சம்பவத்தை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>நீதித்துறை நடுவர் எண்.2,<br>திருவில்லிப்புத்தூர். |